


# ஷஃபான் மாதம் பற்றி நாம் அறியவேண்டியவை

## ஷஃபான் மாதத்தில் நோன்பு நோற்பதின் மகிமை:

عَنْ عَائِشَةَ رَضِي اللہ عَنْهَا قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ يَصُومُ حَتَّى نَقُولَ لَا يُفْطِرُ وَيُفْطِرُ حَتَّى نَقُولَ لَا يَصُومُ فَمَا رَأَيْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ اسْتَكْمَلَ صِيَامَ شَهْرٍ إِلَّا رَمَضَانَ وَمَا رَأَيْتُهُ أَكْثَرَ صِيَامًا مِنْهُ فِي شَعْبَانَ (متفق عليه)

நபிகளார்) ஸல் (அவர்கள் நோன்பை விடமாட்டார்கள் என்று நாம் சொல்லுமளவுக்கு நோன்பு வைப்பவர்களாக இருந்தார்கள் .நோன்பு வைக்கவில்லை என்று நாம் சொல்லுமளவுக்கு நோன்பு வைக்காதவர்களாகவும் இருந்தார்கள் .நபியவர்கள் ரமழானைத் தவிர முழமையாக நோன்பு நோற்ற வேறொரு மாதத்தை நான் பார்க்கவில்லை . நபியவர்கள் அதிகம் நோன்பு வைத்த மாதம் ஷஃபானாகும் .என்று ஆயிஷா) ரலி (அவர்கள் கூறினார்கள்) .ஸஹீஹ் புகாரி:1969 )

عَنْ أَبِي سَلَمَةَ أَنَّ عَائِشَةَ رَضِي اللَّهم عَنْهَا حَدَّثَتْهُ قَالَتْ لَمْ يَكُنِ النَّبِيُّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ يَصُومُ شَهْرًا أَكْثَرَ مِنْ شَعْبَانَ فَإِنَّهُ كَانَ يَصُومُ شَعْبَانَ كُلَّهُ وَكَانَ يَقُولُ خُذُوا مِنَ الْعَمَلِ مَا تُطِيقُونَ ... (متفق عليه)

நபியவர்கள் ஷஃபான் மாதத்தை போன்று வேறொரு மாதத்தில் அதிகம் நோன்பு நோற்கவில்லை .ஷஃபானில் அதிகம் நோன்பு வைப்பவர்களாக இருந்தார்கள் .இன்னும் நபியவர்கள் :உங்களுக்கு முடியுமான வணக்க வழிபாடுகளை செய்யுங்கள், நீங்கள் சோர்வடையும் வரை அல்லாஹ் சோர்வடைவதில்லை என்று கூறக்கூடியவர்களாக இருந்தார்கள் ) . புகாரி:1970)

## நபி ஸல் அவர்கள் ஷஃபான் மாதத்தில் அதிகமாக நோன்பு நோற்றமைக்கு காரணம் என்ன..?

عن أُسَامَةُ ابْنُ زَيْدٍ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ لَمْ أَرَكَ تَصُومُ شَهْرًا مِنَ الشُّهُورِ مَا تَصُومُ مِنْ شَعْبَانَ قَالَ ذَلِكَ شَهْرٌ يَغْفُلُ النَّاسُ عَنْهُ بَيْنَ رَجَبٍ وَرَمَضَانَ وَهُوَ شَهْرٌ تُرْفَعُ فِيهِ الْأَعْمَالُ إِلَى رَبِّ الْعَالَمِينَ فَأُحِبُّ أَنْ يُرْفَعَ عَمَلِي وَأَنَا صَائِمٌ (النسائي و أحمد)

உஸாமதிப்னு ஸைத்) ரலி (அவர்கள் நபியவர்ளிடம் :அல்லாஹ்வின் தூதரே !ஷஃபானை போன்று வேறொரு மாதத்தில் நீங்கள் நோன்பு நோற்பதை நான் காணவில்லை என்று கூறிய போது, நபியவர்கள் : மனிதர்கள் ரஜப், ரமழான் ஆகிய இரு மாதங்களுக்கு மத்தியிலுள்ள ஒரு மாதம் விடயத்தில் பாராமுகமாக இருக்கின்றனர் .அது எப்படிப்பட்ட மாதம் எனில் அகிலத்தாரின் அதிபதியாகிய அல்லாஹ்வின்பால் வணக்க வழிபாடுகள் உயர்த்தப்படக்கூடிய மாதமாகும் .எனது வணக்க

வழிபாடுகள் நான் நோன்பாளியாக இருக்கும் நிலையில் உயர்த்தப்பட வேண்டுமென விரும்புகிறேன் என கூறினார்கள்) .ஆதாரம் :நஸாயி, அஹ்மத்.(

## ஷஃபான் மாதத்தில் விடுபட்ட நோன்புகளை நோற்றல்:

عن أبي سلمة قال : سمعت عائشة – رضي الله عنها – تقول : (( كان يكون علي الصوم من رمضان ، فما استطيع أن أقضيه إلا في شعبان (متفق عليه)

எனக்கு ரமழான் மாதத்தில் விடுபட்ட நோன்புகளை ஷஃபானில் தவிர நிறைவேற்ற முடிவதில்லை என ஆயிஷா) ரலி (அவர்கள் கூறினார்கள் . )முத்தபகுன் அலைஹி.(

## ஷஃபான் பிறை பதினைந்துக்கு பின் நோன்பு நோற்பதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்களா.. ?

عن العلاء بن عبدالرحمن عن أبيه عن أبي هريرة عن النبي عليه الصلاة والسلام قال: ( إذا انتصف شعبان فلا تصوموا) رواه أحمد(٩٤١٤) وأبو داود(٢٣٣٧) والترمذي(٧٣٨)

ஷஃபான் மாதத்தின் அரைவாசியை அடைந்தால் நீங்கள் நோன்பு நோற்க்க வேண்டாம் என நபி) ஸல் (அவர்கள் கூறினார்கள்.

**இந்த ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத மறுக்கப்பட வேண்டிய செய்தி என இமாம் அஹ்மத் இமாம் இப்னு மஈன் இமாம் அபூ ஸுர்ஆ அர்ராஸி இமாம் தஹபீ போன்ற பல ஹதீஸ்கலை வல்லுனர்கள் இதன் அறிவிப்பாளர் வரிசையை ஏற்றுக்கொள்ள முடியாத செய்தி என குறைகண்டு விமர்சனம் செய்துள்ளார்கள்.**

இன்னும் சிலர் இந்த ஹதீஸை சரிகண்டு அதற்கு விளக்கமாக இது மாதத்தின் ஆரம்பத்திலிருந்து நோற்காமல் நடுவிலிருந்து ஆரம்பிப்பவர்களுக்கு தடை விதிக்கிறது எல்லோருக்கும் அல்ல என்பன போன்ற பதில்களை தருகின்றனர்,

## ரமழானுக்கு ஓரிரு நாட்கள் மாத்திரம் இருக்கும் போது நோன்பு நோற்பது தடை!

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِي اللَّهم عَنْهم عَنِ النَّبِيِّ صَلَّى اللَّهم عَلَيْهِ وَسَلَّمَ قَالَ لَا يَتَقَدَّمَنَّ أَحَدُكُمْ رَمَضَانَ بِصَوْمِ يَوْمٍ أَوْ يَوْمَيْنِ إِلَّا أَنْ يَكُونَ رَجُلٌ كَانَ يَصُومُ صَوْمَهُ فَلْيَصُمْ ذَلِكَ الْيَوْمَ (البخاري ومسلم)

'ரமழானுக்கு ஓரிரு நாட்கள் மாத்திரம் இருக்கும் போது நீங்கள் நோன்பு நோற்க வேண்டாம் .வழமையாக நோன்பு வைக்கும் ஒரு மனிதரைத் தவிர, அவர் மாத்திரம் அந்நாளில் நோன்பு வைத்து கொள்ளட்டும்' என நபிகளார்) ஸல் (அவர்கள் கூறினார்கள்) .புஹாரி, முஸ்லிம்.(

உதாரணமாக :திங்கள், வியாழன் வழமையாக நோன்பு வைக்கும் ஒருவர், ரமழானுக்கு முந்தியுள்ள ஓரிரு நாட்கள் திங்கள் அல்லது வியாழனாக அமையுமானால் அவருக்கு நோன்பு நோற்பதற்கு அனுமதியுள்ளது என்பதை மேற்கூறிய ஹதீஸிலிருந்து விளங்க முடிகிறது.

## ஷஃபானின் 15 வது இரவுடன் தொடர்பான சில இட்டுக்கப்பட்ட செய்திகள்:

- رجب شهر الله وشعبان شهري ورمضان شهر أمتي

ரஜப் அல்லாஹ்வின் மாதம், ஷஃபான் எனது மாதம், ரமழான் எனது சமுதாயத்தின் மாதம் என நபிகள் நாயகம்) ஸல் (அவர்கள் கூறினார்கள்.

من صلى ليلة النصف من شعبان ثنتي عشرة ركعة، يقرأ في كل ركعة((قل هو الله أحد)) ثلاثين مرة ، لم يخرج حتى يرى مقعده من الجنة..

'ஷஃபானின் 15 வது இரவில் எவர் 12 ரக்அத்துகளை தொழுது, அதன் ஒவ்வொரு ரக்அத்திலும் இஹ்லாஸ் அத்தியாயத்தை 30 தடவை ஓதுவாரோ, சுவர்க்கத்தில் அவர் தங்கும் இடத்தை பார்க்காமல் அங்கிருந்து வெளியேற மாட்டார்' என நபிகள் நாயகம்) ஸல் (அவர்கள் கூறினார்கள்.

இச்செய்திகள் அனைத்தும் நபியின் பெயரால் புணைந்துரைக்கப்பட்ட வைகளாகும் .இவைகளை இமாம் இப்னு ஜவ்ஸி) ரஹ் (அவர்கள் தனது 'மவ்லூஆத்' என்ற நூலில்  குறிப்பிடுகிறார்.

عنْ عَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ، قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ ﷺ: إِذَا كَانَتْ لَيْلَةُ النِّصْفِ مِنْ شَعْبَانَ، فَقُومُوا لَيْلَهَا وَصُومُوا نَهَارَهَا...

'ஷஃபானுடைய பதினைந்தாம் இரவு வந்தால் அதன் இரவில் நீங்கள் நின்று வணங்குங்கள் .பகலில் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்'.

அஷ்ஷெய்ஹ் அல்பானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ''அஸ்ஸில்ஸிலா அள்ளஈபா' என்ற நூலில் இச்செய்தியின் அறிவிப்பாளர் வரிசை இட்டுக்கட்டப்பட்ட அறிவிப்பாளர் வரிசை என்று குறிப்பிட்டுள்ளார்கள் . இதன் அறிவிப்பாளர் வரிசையில் அப்தில்லாஹ் இப்னு முஹம்மத் என்பவர் இடம்பெறுகின்றார் .இவர் ஹதீஸ்களை இட்டுக்கட்டுபவர் என்று இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள் .மேலும் இவர் பலவீனமானவர் என்று யஹ்யா இப்னு மஈன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் .இமாம் புஹாரி, இப்னுல் மதீனி ரஹிமஹுமல்லாஹ் ஆகியோர் கடும் விமர்சனம் செய்துள்ளனர்.